**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 77 of 2020 |
| Prosecution Witness | : | PW4 |

09.05.2025.

| | | | |
|---|---|---|---|
| Name | : கலையரசன் | Calling | : விவசாயம் |
| spouse Name | : அயினான் | Religion | : |
| Village | : மண்பறை | Age | : 36 |
| Taluk | : முசிறி | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜரில்லை. வழக்கறிஞர் ஆஜர். மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மண்பறையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது. 14.10.2019 அன்று மாலை 5.00 மணிக்கு மூக்கன் என்பவர் வீட்டின் அருகே புலிவலம் காவல் உதவி ஆய்வாளர் வந்து வரைபடம் வந்தார்கள். அதற்கு சாட்சியாக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். என்னுடன் விஜயராகவன் என்பவர் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

அ.சா.1 மூக்கையா எனக்கு தெரிந்தவர். போலிசார் என் வீட்டு வழியாக அ.சா.1ன் வீட்டிற்கு சென்றார்கள். அ.சா.1ன் வீட்டை அடையாளம் காட்ட சொன்னார்கள். நான் அடையாளம் காட்டினேன். போலிசார் என் முன்னிலையில் வரைபடம் வரைந்து கையெழுத்து வாங்கினார்கள். வரைபடம் வரைந்த பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றால் ஆமாம். வேறு பேப்பரில் கையொப்பம் செய்யவில்லை. நான் கையெழுத்து செய்த பேப்பரில் தான் விஜயராகவனும் கையெழுத்து செய்தார்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,

நீதித்துறை நடுவர், துறையூர்